செ.வெ.எண்: 54 நாள்:19.08.2016

# பத்திரிகைச் செய்தி

## தேசிய இளைஞர் விருது 2016

ஒவ்வொரு வருடமும் ஜனவரி திங்கள் 12-ஆம் நாள் சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் தேசிய அளவிலான இளைஞர் விழாவில் மத்திய அரசால் சமூக நலன் மற்றும் தேசிய வளர்ச்சிக்கான பணிகளை சிறப்பாக செய்து வரும் இளைஞர்களுக்கும் (15 வயது முதல் 29 வயது வரையிலான) மற்றும் தன்னார்வத் தொண்டு அமைப்புகளுக்கும் தேசிய இளைஞர் விருது வழங்கப்பட்டு வருகிறது.

1.4.2015 முதல் 31.3.2016 வரையிலான காலத்திற்கு செய்த இளைஞர் நலப் பணிகளுக்காக விருதுகள் இந்த நிதியாண்டில் வழங்கப்பட உள்ளது.

பிரிவு 1: இளைஞர்(தனிநபர்), தகுதிகள்: குறிப்பிட்டுள்ள நிதியாண்டில் வயது 15-லிருந்து 29 வயதுக்குள் இருக்க வேண்டும், தன்னார்வ அடிப்படையில் நிதி ஆதாயம் பெறப்படாமல் தொண்டு செய்திருக்க வேண்டும், இதற்கு முன் விருது பெற்றவர்கள் இந்த ஆண்டுக்கான விருது பெற விண்ணப்பிக்க இயலாது, மத்திய/மாநில/பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர அரசுநிறுவனங்களில் பணிபுரிபவர்கள் இந்த விருது பெற விண்ணப்பிக்க இயலாது. தேசிய விருது: ரூ.40,000/- ரொக்கம், பதக்கம் 25 நபர்களுக்கு மட்டும்.

பிரிவு 2: தன்னார்வ தொண்டு நிறுவனம், தகுதிகள்: சங்க பதிவு சட்டத்தின்படி தொண்டு நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும், நிர்வாக குழுவின் அதிகாரங்கள் அமைப்பு விதிகளில் குறிப்பிட்டிருக்க வேண்டும், எந்தவித லாப நோக்கத்துடனும் தொண்டு பணிகள் ஆற்றியிருக்க கூடாது, குறிப்பிட்ட சாதி,சமய அடிப்படையில் தொண்டாற்றிய நிறுவனங்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்க இயலாது, இதற்குமுன் இவ்விருது பெற்ற தொண்டு நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்க இயலாது, சமுதாய நலப்பணிகளில் ஈடுபட்டு தொண்டாற்றிய புகைப்படம் மற்றும் செய்திக்குறிப்பு மற்றும் இதர ஆவணங்களுடன் சான்றொப்பம் இட்டஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும். தேசியவிருது: ரூ.2,00,000/- ரொக்கம், பட்டயம், பதக்கம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், புதுக்கோட்டை அவர்களின் அலுவலகத்திலருந்து பெற்று பூர்த்தி செய்து 4 நகல்களில் கருத்துருக்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், விளையாட்டரங்கம், புதுக்கோட்டை அலுவலகத்தில் திரும்ப ஒப்படைக்க கடைசி நாள் 25.08.2016. இதன் தொடர்பான விவரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளமான www.sdat.tn.gov.in மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தகுதியான விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலான குழு பரிசீலித்து, மாநில அளவிலான குழுவுக்கு பரிந்துரைக்கும். அவ்வாறு மாவட்டக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட கருத்துருக்கள் மாநில குழுவில் வைக்கப்பட்டு, அக்குழுவினரால் பரிந்துரைக்கும் கருத்துருக்கள் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

எனவே 2015-2016-ஆம் நிதியாண்டில் சமூக நலனில் சிறப்பாக தொண்டாற்றிய புதுக்கோட்டை மாவட்டத்தினைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கீழ்க்காணும் முகவரியில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து 25.08.2016-க்குள் நான்கு நகல்களில் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முகவரி:மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டரங்கம், புதுக்கோட்டை.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**